**<u>சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.</u>**

**நாள் : 14.11.2025**

**வழக்கு எண் : OP.117/2023**

**சாட்சி பெயர் : திருமதி.மாரியம்மாள் என்ற அமுதா / PW.1**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது ஸ்ரீவைகுண்டத்தில் குடியிருந்து வருகிறேன். என் குழந்தைகள் காஜீ மீரான் பள்ளியில் படிக்கிறார்கள். எனக்கும், எதிர்மனுதாரர்க்கும் 12.07.2015ம் தேதி சுய மரியாதை முறையில் திருமணம் ஆனது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தற்போது குறும்பட இயக்குநராக உள்ளார் என்றால் சரிதான். தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்துடன் சேர்ந்து அரசு விழிப்புணர்வு குறும்படங்களை இயக்கி வருகிறார் என்றால் சரிதான். அதற்கு முன்பு பஜாஜ் பனான்ஸ், ஏரல் கிளையில் ரூரல் மேனஜராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். எங்கள் திருமணத்தின்போது அழைப்பேசி கடை வைத்திருந்தார். திருமணத்தின்போது என் பெற்றோர் 12பவுன் நகையும், 25 ஆயிரம் ரொக்கமும் கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. திருமணத்தின் போது என் பெற்றோர் 7 பவுன் நகையும், 10 ஆயிரம் ரொக்கமும் கொடுத்தார் என்றால் சரியல்ல, நகைக்காக ஒரிஜினல் பில் என் வசம் உள்ளது. எங்கள் திருமணத்திற்கு எதிர்மனுதாரர் 3 1/2 லட்சம் செலவு செய்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் திருமணத்தன்று எனக்கு 2பவுன் தங்கசங்கிலியும், 1/2 பவுன் டாலரும் அணிவித்தார் என்றால் சரியல்ல, 2கிராமில் டாலர் கொடுத்தார், தங்கசங்கிலி கொடுக்கவில்லை, கவரிங் செயின் கொடுத்தார். எதிர்மனுதாரர் தங்கசங்கிலி கொடுத்தார் என்றும், கவரிங் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2023, மே மாதம் வரை எங்களுக்குள் பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல, திருமணமாகி 3 நாளில் அவர் போட்ட கவரிங் வெளுத்துவிட்டது அதிலிருந்து பிரச்சனை ஏற்பட்டது. என் அக்கா திருச்சியில் இருக்கிறார். எனது தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாமல் 2023ம் வருடம் மே மாதம் 2வது வாரம் திருநெல்வேலி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். அப்பொழுது நான் என் அப்பாவீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல, தகவல் தெரிந்துதான் என் அப்பாவீட்டிற்கு போனேன். 2023, ஏப்ரல் மாதத்தில் என் குழந்தைகளை அழைத்து கொண்டு என் அக்காவீட்டிற்கு போனேன் என்றால் சரிதான், என் கணவர் குழந்தைகள் லீவு என்பதால் அனுப்பிவைத்தார். மே மாதம் 15

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.11.19 22:04:54 +0530

நாட்கள் கழித்துதான் வந்தேன் என்றால் சரிதான். வந்து 2 நாட்களில் என் தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது என்றால் சரியல்ல, ஒருவாரம் கழித்து உடல்நிலை சரியில்லாமல் ஆனது. என் தகப்பனார் திருநெல்வேலி மருத்துவமனையில் இருப்பதாலும், நான் ஸ்ரீவைகுண்டத்தில் என் அப்பா வீட்டில் இருப்பதாலும் என் கணவர் என்னிடம் என் அப்பா மருத்துவமனையில் இருப்பதாலும், நான் சென்று 6 நாட்கள் ஆகிவிட்டதால் வீட்டிற்கு வரலாம் என்று கேட்டார் என்றால் சரியல்ல. அப்பொழுது நான் 15 நாட்கள் கழித்து வருவேன் என்று எதிர்மனுதாரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. ஜீன் மாதத்தில் குழநதைகளுக்கு பள்ளிகூடம் தொடங்கிவிடும் என்பதால் அதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று சொல்லி என்னை வரசொன்னார் என்றால் சரியல்ல. அதற்கு நான் வரமுடியாது, ஜீன் மாதம் பார்த்துகொள்ளலாம் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. ஜீன் மாதம் 10ம் தேதிதான் என் கணவர் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரியல்ல. பள்ளிகூடம் திறப்பதற்கு 2 நாட்கள் முன்னதாகவே நான் சென்றுவிட்டேன். என் கணவர் வேலைக்குபோய்விட்டு வரும்பபோது அவருக்கு உணவு பரிமாறாமல், உனக்கு கை, கால் இல்லையா, எடுத்துபோட்டு சாப்பிடவேண்டியதுதானே என்று சொன்னேன் என்றால் சரியல்ல. அவர் என்னிடம் கேட்கவில்லை, ஆனால் அதுசம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன்பிறகு என் குழந்தைகளை அழைத்துவ கொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, மதியம் 2 மணிமுதல் இரவு 8 வரை பொம்பளா வீட்டில் இருக்கும் தேவடியா அப்பா வீட்டு போறா, அவருடைய டிரஸ் கலந்தது கூட தெரியாமல் என்னை அடித்து கொண்டு இருந்தார். அதன்பிறகு கடைசி 10மணி பஸ்க்கு என் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன், என்னுடன் என் குழந்தைகளும் வந்துவிட்டார்கள். என் கணவர் என்னையும், குழந்தைகளையும் மீண்டும் அழைத்துவர வேண்டும் என்று நண்பர் மாரியப்பனுடன் ஒருமாதம் கழித்து வந்தார், குழந்தைகள் பீச்–க்கு அழைத்து செல்கிறேன் என்று சொல்லி அங்கேயே வைத்து கொண்டார். என் கணவர் என்னை மீண்டும் வீட்டுக்கு வா என அழைத்தபோது என் அம்மா மண்ணை துாவி சண்டை போட்டார் என்றால் சரியல்ல. குழந்தைகளை அழைத்துபோனதாக சொல்வது எத்தனை மணி என்றால் மாலை 4 மணி இருக்கும். துாத்துக்குடி பீச்–க்கு அழைத்து செல்வதாக சொன்னார். நான் சொன்னமாதிரி எதிர்மனுதாரர் குழந்தைகளை அழைத்து செல்லவில்லை என்றும்,

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A Date: 2025.11.19 22:04:59 +0530

குழந்தைகள் அவருடன் செல்ல வேண்டும் என்று அவருடன் போனார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு ஒரு மாதம் கழித்து வீட்டின் வெளியே விளையாடி கொண்டிருந்த என் குழந்தைகளை நானும், என் அம்மாவும், என் அண்ணியும் காரில் போய் அழைத்து வந்து விட்டோம் என்றால் சரியல்ல, நானும், என் அம்மாவும் என் குழந்தைகளை பார்ப்பதற்காக போனோம், அப்போது எதிர்மனுதாரர் அம்மா என்னை அடித்தார், நான் அழுதலை பார்த்து என் குழந்தைகள் என்னுடன் வந்துவிட்டார்கள். எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்து பேசுங்கள் என்று சொன்னபோது என் அண்ணன் காரை வேகமாக ஓட்டிவந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தங்கை காரை தடுத்து நிறுத்தினார் என்றால் சரியல்ல, அவர் அங்கே இல்லைவே இல்லை. அதன்பிறகு காவல்நிலையத்தில் விசாரணையின்போது ஒருமாதம் என் அப்பா வீட்டில் இருந்து வருகிறேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல, இன்ஸ்பெக்டர்தான் 3 மாதம் டைம் கொடுத்து எதிர்மனுதாரர் ஏதாவது பேசுகிறாரா என்று கூறினார். அதன்பிறகு நான் குழந்தைகளை அழைத்து கொண்டு எதிர்மனுதாரருடன் வாழ செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னையும், எதிர்மனுதாரரையும் சேர்ந்து வாழ வைப்பதற்காக என் பெற்றோரும், என் சித்தப்பா முக்காணி என்பவரும், எதிர்மனுதாரரின் மாமாவும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. குழந்தைகளை நான் காட்டவிலலை என்று சொல்வது உண்மையல்ல. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ளார் என்றும், நான்தான் அவருடன் வாழ மறுத்துவருகிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் எந்த வேலையும் நிரந்தரமாக செய்யவில்லை என்பதால், தான்தோன்றிதனமாக இருக்கிறார் என்றால் சரியல்ல. அவர் குறும்படம் எடுப்பதும் நிரந்தர வேலையல்ல. அவர் குறும்படம் எடுப்பது தான்தோன்றிதனம் அல்ல, அவரது விருப்பம் என்று சொன்னால் சரிதான், வேலை இல்லை என்றால் சாப்பாட்டுக்கு எங்கே போவது. எதிர்மனுதாரர் போதிய வருமானம் உள்ளது என்றும், வேலையில்லை என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு சமுதாயத்தில் நல்ல மரியாதை உள்ளது என்று சொன்னால் அதனால்தான் நான் சொல்வதை யாரும் நம்ப மாட்டுக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் ஆடம்பரமாக வாழ்வதால்தான் எதிர்மனுதாரர் தான்தோன்றிதனமாக சுற்றுகிறார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் மீது எந்த தப்பும்

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A Date: 2025.11.19 22:05:05 +0530

இல்லையென்றும், அவருக்கு சரியான பொருளாதாரம் இல்லை என்பதால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் எப்பொழுதும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல, அவருடன் என்னைவிட ஒரு அடிமை கிடைக்கமாட்டார், எனக்கு அடிவாங்க தெம்பு இல்லை. என் சகோதரருக்கு வேலை வாங்கி தருவதாக சொல்லி 2 லட்சம் வாங்கி கொண்டு ஏமாற்றி விட்டார் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல, ஒரு லட்சம் அக்கவுண்டில் போட்டோம், ஒரு லட்சத்திற்கு என்னிடம் பில் உள்ளது. எதிர்மனுதாரர் சிலருக்கு வேலை வாங்கி கொடுத்தார் என்று தெரிந்துகொண்டு என் பெற்றோர்கள் என் கணவரிடம் என் சகோதருக்கு வேலை வாங்கி தர சொன்னார்கள் என்றால் சரியல்ல. என் பெற்றோர்கள் வேண்டுகோளுக்கிணங்க எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டு புதுக்கோட்டையிலுள்ள கனகராஜ் மற்றும் முத்தையாபுரத்தில் மாசானமுத்து ஆகியோரிடம் 2 லட்சம் கொடுத்து வேலை வாங்கி தருமாறு என்று கேட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி 2 பேரும் எதிர்மனுதாரரைபோல் மேலும் 12 நபர்களை ஏமாற்றியுள்ளார்கள் அதை தெரிந்து கொண்டு எதிர்மனுதாரர் தூத்துக்குடி எஸ்.பி ஆபிஸில் புகாா கொடுத்தார் என்றால் தெரியாது. அந்த புகார் நிலுவையிலுள்ள விபரம் எனக்கும், என் பெற்றோருக்கும் தெரியும் என்றால் சரியல்ல. 2 லட்சம் வாங்கி கொண்டு ஏமாற்றியதாக எதிர்மனுதாரர் மீது தனியாக புகார் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் மீது எப்.ஐ.ஆர் உள்ளதா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் மோசடி செய்யவில்லை என்றும், மோசடி செய்த நபர்கள் மீது எதிர்மனுதாரர் புகார் கொடுத்துள்ளார் என்று நன்கு தெரிந்து கொண்டே உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி என் கணவருடன் என்னுடன் சேர்ந்துவாழ விரும்புகிறார் என்றால் எனக்கு விருப்பமில்லை. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.11.19 22:05:10 +0530

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**